# 11

# திக்ரும் ஸலவாத்தும்

## திக்ர்

ஒரு முஸ்லிமின் மிக உயர்ந்த இலட்சியம், மறுமையில் சுவனத்தை அடைவதாகும். இவ்வுலகக் கவர்ச்சியால் வழிதவறாமல் தன்னைப் பாதுகாத்து, இலட்சியத்துடன் வாழ வழிகாட்டும் சாதனம் அல்லாஹ்வின் நினைவாகும். இவ்வாறு அல்லாஹ்வின் நினைவோடு வாழ்வதையே அல்குர்ஆனும் ஸுன்னாவும் 'திக்ர்' எனக் குறிப்பிடுகின்றன.

**திக்ர் பற்றி வந்துள்ள சில அல்குர்ஆன் வசனங்கள்**

"அல்லாஹ்வை திக்ர் செய்வதே உயர்ந்தது." (29:45)

"அல்லாஹ்வை அதிகமாக திக்ர் செய்கின்ற ஆண்களுக்கும் பெண்களுக்கும் அல்லாஹ் பாவமன்னிப்பையும் மகத்தான கூலியையும் ஆயத்தப்படுத்தியுள்ளான்." (33:35)

"நீங்கள் என்னை நினையுங்கள். நான் உங்களை நினைக்கின்றேன். எனக்கு நன்றி செலுத்துங்கள். என்னை நிராகரிக்காதீர்கள்." (2:152)

"அறிந்து கொள்ளுங்கள். அல்லாஹ்வை திக்ர் செய்வதன் மூலமே உள்ளங்கள் அமைதி பெறுகின்றன." (13:28)

"அல்லாஹ்வை அதிகமதிகம் திக்ர் செய்யுங்கள்: நீங்கள் வெற்றியடைவீர்கள்." (62:10)

"நீர் உம் மனத்திற்குள் மிக்கப் பணிவோடும் அச்சத்தோடும் உரத்த சப்தமின்றியும், காலையிலும் மாலையிலும் உம் இறைவனை 'திக்ர்' செய்து கொண்டிருப்பீராக! (அவனை) மறந்திருப்போரில் ஒருவராக நீர் இருக்க வேண்டாம்." (7:205)

## திக்ர் இருவகைப்படும்

### 1. திக்ர் கல்பி (உள்ளத்தால் செய்யும் திக்ர்):-

திக்ர் கல்பி என்பது, உள்ளத்தால் அல்லாஹ்வை நினைவுபடுத்துவதாகும். உள்ளம் அல்லாஹ்வின் நினைவில் இருப்பதால் ஒளி பெறுகின்றது; மென்மையடைகின்றது. நற்காரியங்களைச் செய்ய நெகிழ்ந்து கொடுக்கின்றது. அல்லாஹ்வின் நினைவில் வாழாத உள்ளமோ வறட்சியடைந்து ஷைத்தானின் இருப்பிடமாக மாறிவிடுகின்றது.

"அல்லாஹ்வின் திக்ரை விட்டும் விலகி எவருடைய உள்ளங்கள் கடினமாகி விட்டனவோ, அவர்களுக்குக் கேடுதான். இத்தகையோர் பகிரங்கமாக வழிகேட்டில் இருக்கின்றனர்." (39:22)

"யார் (பேரருள் மிக்கவனான) அர்ரஹ்மானின் திக்ரைப் புறக்கணிக்கின்றனரோ, நாம் அவனுக்கு ஒரு ஷைத்தானை ஏற்படுத்தி விடுவோம். அவன் அவனது நெருங்கிய நண்பனாகிவிடுகின்றான்." (43:36)



வறண்ட பூமியைக் கொத்தி மென்மைப் படுத்துவது போல், நாம் அல்லாஹ்வின் திக்ரால் எமது உள்ளத்தை எப்போதும் மென்மையாக்க வேண்டும். அல்லாஹ்வின் படைப்புகளைப் பற்றிச் சிந்திப்பதும், பய பக்தியுடன் அல்குர்ஆனைப் பொருளறிந்து ஓதுவதும், அல்லாஹ்வின் அருட்கொடைகளை நினைவுபடுத்திப் பார்ப்பதும் அதற்கான வழிமுறைகளாகும்.

### 2. திக்ர் லிஸானி (நாவினால் மொழியும் திக்ர்)

திக்ர் லிஸானி என்பது, அல்லாஹ்வை நினைவுபடுத்தும் வார்த்தைகளை நாவினால் மொழிவதாகும். இது மிக முக்கியமான ஓர் அமலாகும். மார்க்கக் கடமைகளைப் பாரமாகக் கருதிய ஒரு மனிதன், தான் எப்போதும் கடைப்பிடித்து வரக்கூடிய ஒன்றைக் காட்டித் தருமாறு நபி ஸ அவர்களிடம் கேட்டபோது,

"எப்போதும் உனது நாவு அல்லாஹ்வின் திக்ரால் நனைந்திருக்கட்டும்"

என்று பதில் கூறினார்கள்.

நபி ஸ அவர்கள், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பொருட் செறிவு மிக்க திக்ருகளை மொழிந்துள்ளார்கள். அவை அல்லாஹ்வின் ஏகத்துவத்தை வெளிப்படுத்தும் 'தஹ்லீல்' களாகவும், அவனைத் துதிக்கும் 'தஸ்பீஹ்'களாகவும், அவனைப் புகழும் 'தஹ்மீத்'களாகவும், அவனைப் பெருமைப்படுத்தும் 'தக்பீர்'களாகவும் காணப்படுகின்றன.

பின்வரும் நபிமொழிகளைக் கவனியுங்கள்.

لَا إِلٰهَ إِلَّا اللهُ என்ற கலிமாவை ஒரு தட்டிலும் வானங்கள் பூமியில் உள்ளவற்றை இன்னொரு தட்டிலும் வைத்தால், கலிமா வைக்கப்பட்ட தட்டே எடையில் கூடியதாக இருக்கும். (நஸாஈ)

யார் ஒரு நாளைக்கு سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهِ என்று 100 முறை கூறுகின்றாரோ அவரது பாவங்கள் கடல் நுரையளவு இருந்தாலும் மன்னிக்கப்படும். (புஹாரி, முஸ்லிம்)

اَلْحَمْدُ لِلّٰهِ எனும் திக்ர் மீஸானை நன்மைகளால் நிரப்பும்.

سُبْحَانَ اللهِ اَلْحَمْدُ لِلّٰهِ என்பன வானங்கள் பூமிக்கு இடைப்பட்டவற்றை நன்மைகளால் நிரப்பும்.” (முஸ்லிம்).

இரு வார்த்தைகள் உள்ளன. அவை நாவிற்கு இலகுவானவை. மீஸானில் எடை கூடியவை. ரஹ்மானாகிய அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானவை. அவை سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهِ سُبْحَانَ اللهِ الْعَظِيْمِ என்பனவாகும். (முஸ்லிம்)

இவை திக்ரு செய்வதற்கு மக்களை ஆர்வமூட்டும் சில ஹதீஸ்களாகும். நபி (ஸல்) அவர்கள் திக்ரு செய்வதற்கு மிகவும் பொருத்தமான நேரங்களையும் காட்டித் தந்துள்ளார்கள். அவை:

- காலை மாலை வேளைகள்
- பர்ழான தொழுகைக்குப் பின்
- தூங்குவதற்கு ஆயத்தமான வேளை




இந்நேரங்களை நாம் திக்ருக் காக ஒதுக்கிக் கொள்ள முயல் வதுடன், நாவினால் திக்ரை மொழி யும்போது எமது உள்ளமும் இறை நினைவில் ஈடுபட வேண்டும்.

# ஸலவாத்து

முஹம்மத் ஸ அவர்கள் அகிலத்தாருக்கு அருளாக அல்லாஹ்வால் அனுப்பப் பட்ட இறுதித் தூதராவார். அவரைப் பற்றி அல்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது.

''(மு.ஃ.மின்களே) நிச்சயமாக உங்களில் இருந்தே ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கின்றார்; நீங்கள் துன்பத்துக்குள்ளாகிவிட்டால் அது அவருக்கு மிக்க வருத்தத்தைக் கொடுக்கிறது. அன்றி உங்களுக்கு நன்மைகளையே அவர் பெரிதும் விரும்புகின்றார். இன்னும், மு.ஃ.மின்கள் மீது மிக்க கருணையும் கிருபையும் உடையவராக இருக்கின்றார்.'' (9:128)

நபி ஸ அவர்கள் மனிதர்களிடம் மிகுந்த அன்புடையவராகவும் மனிதர்களின் ஈடேற்றத்திற்காக உழைத்த தியாகியாகவும் இருந்தார்கள். மறுமையிலும் எல்லா மனிதர்களுக்காகவும் மன்றாடுபவர் அவரே. ஆகவே, அவற்றிற்கு நன்றிக் கடனாக நாமும் நபி ஸ அவர்களை அகிலத்தார் அனைவரை விடவும் அதிகமாக நேசிக்க வேண்டும். அந்நேசத்தை வெளிப்படுத்தும் ஒரு வழிமுறை அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்லுவதாகும். நபியவர்கள் மீது ஸலவாத்துச் சொல்லுமாறு அல்லாஹ்வும் கட்டளையிடுகின்றான்.

''அல்லாஹ்வும் மலக்குகளும் நபி ஸ அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்கின்றார்கள். ஆகவே விசுவாசிகளே, நீங்களும் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் சொல்லுங்கள்.'' (33:56)

அல்லாஹ் ஸலவாத்துச் சொல்வதென்பது அருள் புரிவதையும், மலக்குகள் ஸலவாத்துச் சொல்வதென்பது பிரார்த்தனை புரிவதையும் குறிக்கும்.

- **ஸலவாத்தின் மகிமை பற்றிய சில ஹதீஸ்கள்**

''யார் என் மீது ஒருமுறை ஸலவாத்துச் சொல்கிறாரோ அவர் மீது அல்லாஹ் பத்து முறை ஸலவாத்துச் சொல்கிறான்.'' (முஸ்லிம்)

''உங்களது நாட்களில் மிகவும் சிறந்தது வெள்ளிக்கிழமையாகும். ஆகவே அத்தினத்தில் என் மீது அதிகம் ஸலவாத்துச் சொல்லுங்கள். உங்களது ஸலவாத்து எனக்கு எடுத்துக் காட்டப்படுகின்றது.'' (அபூதாவூத்)

''எனது பெயர் நினைவூட்டப்பட்டும் என் மீது ஸலவாத்துச் சொல்லாதவன் உலோபியாவான்.'' (அபூதாவூத்)

''என்மீது அதிகமாக ஸலவாத்துச் சொல்பவரே மறுமைநாளில் மனிதரில் எனக்கு மிக வேண்டியவர் ஆவார்''. (திர்மிதி)



இலவச விநியோகத்திற்காக

ஸலவாத்தின் மகிமை பற்றிக் கூறும் ஹதீஸ்கள் ஏராளமாக உள்ளன. அவற்றினை ஆதாரமாய்க் கொண்டு, இமாம் இப்னுல் கையிம் (ரஹ்) அவர்கள் ஸலவாத்து சொல்வதன் மூலம் கிடைக்கும் முப்பத்தொன்பது பயன்களை குறித்துக் காட்டுகின்றார். அவற்றுள் சில வருமாறு:

- அல்லாஹ்வின் கட்டளைக்குச் செயல் வடிவம் கொடுத்தல்
- அல்லாஹ்வுடனும் மலக்குகளுடனும் நெருக்கமடைதல்
- ஒரு ஸலவாத்துக்குப் பகரமாக அல்லாஹ்வின் பத்து ஸலவாத்துக்களைப் பெற்றுக் கொள்ளல்
- மறுமையில் நபியவர்களின் நெருக்கத்தைப் பெற்றுக்கொள்ளல்
- பாவங்கள் மன்னிக்கப்படுதல்

திக்ர் மற்றும் ஸலவாத்துச் சொல்வதற்கெனப் பிரத்தியேக ஒழுங்குவிதிகள் இல்லை. எனினும், அவற்றின் பயன்களைப் பூரணமாகப் பெற்றுக்கொள்ள பின்வரும் விடயங்கள் உதவியாக அமையலாம்.

உள்ளத்தை ஒரு முகப்படுத்தல்

அடக்கமாக ஈடுபடல்

பொருள் உணர்ந்து ஈடுபடல்

திக்ரிலும் ஸலவாத்திலும் அதிகமாக ஈடுபட்டு அல்லாஹ்வினதும் அவன் தூதரினதும் அன்பைப் பெறுவோம்.



**பயிற்சி**

1. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடைப்புக்குள் அடையாளமிடுங்கள்.

   i) திக்ரின் மூலம் உள்ளம் அமைதி பெறமாட்டாது. (  )

   ii) மீஸானை நன்மைகளால் நிரப்பும் ஒரு திக்ர் தஹ்மீதாகும். (  )

   iii) வெள்ளிக்கிழமை நாட்களில் அதிகமாக ஸலவாத்துக் கூற வேண்டும். (  )

   iv) நாம் நபி ச அவர்கள் மீது அளவிலா அன்பு கொள்ள வேண்டும். (  )

2. இணைக்குக

| அ | ஆ |
|---|---|
| i) தஹ்லீல் | اللهُ أَكْبَر |
| ii) தஹ்மீத் | سُبْحَانَ الله |
| iii) தக்பீர் | لاَ إِلٰهَ إِلاَّ الله |
| iv) தஸ்பீஹ் | اَلْحَمْدُ لِله |

3. செயற்பாடு:

   i) திக்ரின் மூலம் கிடைக்கும் பயன்கள் ஐந்தினைப் பட்டியல் படுத்துங்கள்.

   ii) ஸலவாத்து இப்ராஹீமியாவை அரபியில் எழுதுங்கள்.

   iii) இப்பாடத்தில் இடம்பெற்றுள்ள ''திக்ர்'' களின் பொருளைத் தேடிப்பெற்று மனனமிடுங்கள்.